## குவைத்தில் உள்ள தொழிலாளர் முகாமை பிரதமர் பார்வையிட்டார்

டிசம்பர் 21, 2024

தனது குவைத் பயணத்தின் முதல் பகுதியாக, பிரதமர் திரு நரேந்திர மோடி, சுமார் 1500 இந்திய நாட்டவர்கள் பணிபுரியும் மினா அப்துல்லா பகுதியில் உள்ள தொழிலாளர் முகாமுக்குச் சென்றார். இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த இந்தியத் தொழிலாளர்களுடன் கலந்துரையாடிய பிரதமர், அவர்களின் நலம் குறித்து விசாரித்தார்.

2. தொழிலாளர் முகாமுக்குச் சென்றது, வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தொழிலாளர்களின் நலனுக்காக பிரதமர் அளித்த முக்கியத்துவத்தின் அடையாளமாகும். சமீபத்திய ஆண்டுகளில், வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தொழிலாளர்களின் நலனுக்காக இ-மைக்ரேட் போர்டல், MADAD போர்டல் மற்றும் மேம்படுத்தப்பட்ட பிரவாசி பாரதிய பீமா யோஜனா உள்ளிட்ட தொழில்நுட்பம் சார்ந்த பல முயற்சிகளை அரசாங்கம் தொடங்கியுள்ளது.

**குவைத் சிட்டி**

**டிசம்பர் 21, 2024**